# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 151 of 2020

| | |
|---|---|
| பெயர் | : திரு. கிருஷ்ணமூர்த்தி |
| தந்தை பெயர் | : திரு. சுந்தரம் |
| வா.த.சா | : 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 07.10.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

1970ம் ஆண்டு அசல் வழக்கு 960/1970 வழக்கின் வாதுரை மற்றும் எதிர் உரை தீர்ப்புரை, தீர்ப்பாணை எதையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் அதை நீதிமன்றத்திலும் நான் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) அசல் வழக்கு 464/1992 வழக்கின் வாதுரை மற்றும் எதிர் உரை தீர்ப்புரை, தீர்ப்பாணை எதையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் அதை நீதிமன்றத்திலும் நான் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) அசல் வழக்கு 464/1992படி வழக்கு சொத்து முழுவதும் எனக்கு குடும்ப சொத்து அல்ல என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் யாரும் தரப்பினர்களாக சேர்க்கப்படாததால் மேற்படி தீர்ப்பாணை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

4) சுந்தரம் நகர் என்ற மனைப்பிரிவை நான் அமைத்துள்ளேன். அதன் மனை வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். அந்த மனைபிரிவில் அமைந்துள்ள மனை எண்.20,31,32,33 ஆகியவைகளைப் பொருத்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனைகளுக்கு நான்கு எல்லைகள் பற்றி வழக்கில் நான் சொல்லியுள்ளேன். மேற்படி நான்கு மனைகளும் சர்வே எண்.111/A-ல் அமைந்துள்ளது. சர்வே எண்.111/A-க்கு புதிய சர்வே எண்கள்.23/7, 23/2, 22/3, 22/4 ஆகும்.

5) மேற்படி மனை எண்கள் 20,31,32,33 ஆகிய மனைகள் சர்வே எண்.22/3ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் - 22/3க்கு மொத்த விஸ்தீரணம் 22செண்டு ஆகும். மேற்படி மனை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். 2019ம் ஆண்டு மேற்படி சுந்தரம் நகர் மனைப்பிரிவுக்கு அரசு அங்கீகாரம் பெற்றேன்.

6) பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் வழக்கு சொத்து மனைப்பிரிவுகளாக அமையவில்லை என்று கூறியுள்ளார்கள் மேலும் பயிர் நிலமாகத்தான் தற்போதுவரை உள்ளது என்று கூறியுள்ளார்கள். அந்த விபரம் எனக்குத் தெரியும். மேற்படி பதிலுரையில் சொல்லியுள்ள விபரங்களை பொய்ப்பிக்க வழக்கறிஞர் ஆணையர் மனு எதுவும் நான் தாக்கல் செய்து இடத்தை பார்வையிடவில்லை.

7) மனை எண்.32 மற்றும் 33 1ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், மனை எண்.31 2ம் பிரதிவாதி அனுபவத்திலும், மனை எண்.20 3ம் பிரதிவாதியின் அனுபவத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. இன்று வரை பிரதிவாதிகள் மேற்படி நிலத்தில் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ரங்கசாமி என்றால் சரிதான். அவர் பழைய சர்வே எண்.104/1-ல் ஏக்.4.12 செண்டு நிலத்தை தேசிகாச்சாரி என்பவரிடமிருந்து 1944-ம் ஆண்டு கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அவ்வாறு கிரயப்பத்திரத்தில் ஏக்.4.12-செண்டு என்று சொல்லியிருந்தாலும், உண்மையில் திரு. ரங்கசாமி ஏக்.4.54 செண்டு நிலத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

8) பழைய சர்வே எண்.104/1 க்கு புதிய சர்வே எண்.22/3 என்று கொடுக்கப்பட்டு அதன் விஸ்தீரணம் ஹெக்டேர் 1.84.0ஆகும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி ஹரிராமன், சங்கர், பாண்டுரங்கன் ஆகியோரிடமிருந்து ஏக்.1.33 செண்டு 1975ம் ஆண்டு கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி நிலத்தை ஹரிராமன், பாண்டுரங்கன், சங்கர், அம்பிகா ஆகியோர் சேர்ந்து சீத்தாராமனுக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். மீதம் நிலம் 2,3 பிரதிவாதிகளிடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

9) வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.